**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 68/2021**
**அ.சா. 4 – திரு.கண்ணதாசன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.05.2026.

* * * * * * *

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அ.சா.4 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து சம்மந்தமாக போலிசார் சம்பவம் நடந்த தேதியிலேயே என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்ததை வாக்குமூலமாக தெரிவித்துள்ளேன் அதனைத்தான் சாட்சியமாகவும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். இறந்துபோன சந்தானம் எனக்கு முன்பின் பழக்கம் இல்லை. அவரை நான் பார்த்திருக்கிறேன். அவரை நான் வண்டியில் போகும்போதும், வரும்போதும் பார்த்திருக்கிறேன். அவருடைய பெயர், விபரங்கள் எனக்குத் தெரியாது. இறந்தபோன சந்தானம் விபத்தின்போது தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அசா.1 சிவக்குமாரை எனக்குத் தெரியும் ஆனால் பழக்கம் இல்லை. விபத்து நடந்த இடம் தேனியில் இருந்து பெரியகுளம் செல்லும் சாலை ஆகும். எனது சாட்சியம் படி அவர் ரோட்டின் இடது புறமாகத்தான் வந்தார். ரோட்டின் நடுவே தடப்பு சுவர் இருந்தது. விபத்து நடந்ததும், இறந்துபோன சந்தானம் அவர் வந்த திசையில் இருந்து எதிர் திசையில் கிடந்தாரா என்றால் சரியல்ல. திரும்பும் சமயத்தில் விபத்து நடந்தது. விபத்தை ஏற்படுத்திய நபர் பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. சாட்சி ராஜேஸ் கண்ணா எனது பகுதியைச் சார்ந்தவர். வினோத்குமார் எனக்கு பழக்கம் இல்லை. விபத்து நடந்ததும், ராஜேஸ் கண்ணா, நான் மற்றும் வினோத்குமார் ஆகியோர் சேர்ந்து அசா.1 வீட்டிற்கு சென்று தகவல் தெரிவித்தோமா என்றால் இல்லை. விபத்து நடந்ததும் போலிசார் வந்தனர். அசா.1 வந்தார். அசா1. எனது ஊரைச் சார்ந்தவர் என்றாலும், எனக்கு நன்கு தெரிந்தவர் என்றாலும், நான் விபத்தை எதுவும் பார்க்கவில்லை என்றாலும் பார்த்ததாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.05.29 17:09:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**